# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.203/2014

பிரதிவாதிகள் தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரவணன் பி.வா.சா.–1 | | |
| த/பெ. | நடராஜன் | | |
| கிராமம் | | தொழில் | பருப்பு வியாபாரம் |
| தாலுகா | அருப்புக்கோட்டை | வயது | 53 |

---

முதல் விசாரணை 17–02–2026.

நான் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி விஜயலெட்சுமி என்பவரின் மகன். இவ்வழக்கின் விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். என்னை சாட்சியாக விசாரிக்க நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி. என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) 30.08.2006ம் தேதிய 1ம் பிரதிவாதிக்கு பழனிச்சாமி நாடார் வகையறா எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் கணினி நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அசல் பத்திரம் வீட்டிலிருப்பதாக சாட்சி கூறுகிறார்)

2) வீட்டு வரி ரசீது அசல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) தண்ணீர் வரி ரசீது அசல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) மின் கட்டண ரசீது இணையதள நகல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 13.06.2013 ம் தேதிய வாதி அவரது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பிற்கு அனுப்பிய பதில் அறிவிப்பு சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 01.01.1987 முதல் 04.03.2012 வரையுள்ள தாவாச்சொத்திற்குரிய வில்லங்க சான்று சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.02.17 12:15:11 +0530